**கொங்கிலாச்சான்**

**வாழி திருநாமம்**

ஆவணியில் கேட்டை தனில் அவதரித்தான் வாழியே
அழகாரும் கொங்கு தனில் அமர்ந்த செல்வன் வாழியே
தேவியெனும் மற்றறியேன் என்றுரைத்தான் வாழியே
தேவியெனும் மனையாளால் தெளிவுற்றான் வாழியே
பாவணிந்த மாறனுரை பரிந்துகந்தான் வாழியே
பாகவத ஆராதனத்தால் பருகினான் வாழியே
கோயில் நம்பெருமானார்க்கு மருகனார் வாழியே
கொங்கிலண்ணன் தம்முடைய குரைகழல்கள் வாழியே

---